**தலைப்பு 102 – நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

கட்டுநிதி முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டிற்காக திட்டமிட்டபடி கோரப்பட வேண்டிய கட்டுநிதி ரூபா 5,893 மில்லியனாக இருந்த போதும் அதில் ரூபா 3,608 மில்லியன் மாத்திரம் கோரப்பட்டமயால் ரூபா 2,285 மில்லியன் அதாவது 39 சதவீதம் திட்டமிட்ட கட்டுநிதியை விட குறைத்து விண்ணப்பிக்கப் பட்டிருந்தது. | திட்டமிட்டபடி கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்டு குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். | செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் இடம்பெறாமை மற்றும் பாதீட்டுச் சுற்றறிக்கை மூலம் மூலதன நிதிஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்டமை கட்டுநிதி விண்ணப்பித்தல் குறைவிற்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | திட்டமிட்டபடி குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2019 ஆண்டின் போது அமைச்சினால் மொத்தம் ரூபா 3,608 மில்லியன் கட்டுநதியாக கோரப்பட்டிருந்த போதும் திறைசேரியால் ரூபா 2,623 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டமையால் ரூபா | - மேற்படி - | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

985 மில்லியன் அதாவது 27 சதவீதத்தினால் கோரப்பட்ட கட்டுநிதியை விட குறைவாக கிடைத்திருந்தது.

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவினத் தலைப்பின் கீழ் 16 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா ரூபா 7,805,000 ஆன மொத்த நிதி ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. | நிதிஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் லெவினம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | செலவினத் தலைப்பின் கீழ் 24 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா ரூபா 2,936,980,000 ஆன மொத்த நிதிஏற்பாடுகளில் ரூபா 2,164,074,011 சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்புக்கள் குறித்த செலவின விடயங்களின் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. | நிதி ஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் குறித்த கட்டுநிதி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆண்டில் இடம்பெற்ற அமைச்சு மாற்றம், பாதீட்டுச் சுற்றறிக்கை மூலம் மூலதன நிதிஏற்பாடு மட்டுப்படுத்தப் பட்டமை உரிய வகையில் கட்டுநிதி கிடைக்காமை நிதி ஏற்பாடு குறைப்பயன்பாட்டிற்கு காரணமாக இருந்தது. |
| (இ) | செலவினத் தலைப்பின் கீழ் 03 அரச நிறுவனங்களுக்கு மூலதனச் செலவினத்திற்காக ரூபா 52,000,000 மில்லியனான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் அந் நிறுவனத்தினால் அந் நிதிஏற்பாட்டின் பயன்பாடு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 48,177,270 அதாவது 93 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன் |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டின் போது உயர் நீதிமன்றத்தினால் பெற்றுக்கொண்ட கட்டளையொன்றின் பிரகாரம் நிதி நிறுவனங்களில் முதலீடு | திட்டமிட்டபடி கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்டு நிதிஏற்பாடுகளை செயற்திறனாக | தேவையான பிரகாரம் போதியளவு கட்டுநிதி திறைசேரியிடமிருந்து கிடைக்காமை காரணமாக இருந்தது. |

| | |
|---|---|
| செய்துள்ள வைப்பாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,055,000,000 கூட்டுத்தொகையான குறைநிரப்பு நிதிஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் அந்நிதி ஏற்பாட்டில் ரூபா 355,100,000 அதாவது தேறிய நிதிஏற்பாட்டின் 34 சதவீதம் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். |

**2.3 முற்பண வழங்கலும் தீர்ப்பனவும்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ஓராண்டிற்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 920,110 ஆக இருந்தது. | நிலுவைக் கடன் தொடர்பாக ஆராய்ந்து பாரத்து தாமதமின்றி தேவையான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | அறவிடுவதற்கு இயலுமை காணப்படாத கடன் நி.பி 113 இன் பிரகாரம் விட்டு விடுவதற்காக அரச நிதித் திணைக்ககளத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய கடன் தொகையை அறவிடுவதற்காக சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய கடன் தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் வெளிநாட்டுக் கடன் / மானியங்களின் கீழ் 07 செயற்திட்டங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,894,600,000 | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ள நிதிஏற்பாட்டை | 2019 ஆம் ஆண்டின் போது அமைச்சன் செயற் திட்டங்களில் ஒன்று ஆரம்பிக்காமல் இருந்தமை |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்படாமை மற்றும் எஞ்சிய 06 செயற்திட்டங்களின் செயலாற்றல் மந்த கெதியிலும் இருந்த காரணத்தினால் ரூபா 1,364,677,677 பெறுமதியான அதாவது 72 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். | மற்றும் எஞ்சிய 06 செயற்திட்டங்களில் எதிர்பார்த்த மட்டத்தில் செலவினம் முன்வைக்கப்படாமை பிரதான காரணங்களாக இதற்கு தாக்கமளித்திருந்தன. |

**3.2 செயலாற்றல்**

2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் மூலம் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், ஏதேனும் வரியொன்றோ, கட்டணமொன்றோ அல்லது தண்டமொன்றோ மற்றும் உரிய காரணம் தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் ஏதேனும் தீர்மானமொன்றினால் அதிருப்தியடையும் எவரேனும் நபருக்கு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ய முடியுமாக இருப்பதுடன் அவ்வாறு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள் மற்றும் அவற்றை உறுதிப்படுத்துவதற்குரிய பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகளின் அளவு 923 ஆக இருந்ததுடன் அதில் 385 மேன்முறையீடுகளுக்கு திசெம்பர் 31 ஆந் திகதி அளவிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | வரி மேன்முறையீட்டு விசாரணை செயற்பாடுகள் துரிதப்படுத்தல் வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (ஆ) விசாரித்து தீர்வு வழங்கப்பட்ட 385 மேன்முறையீடுகளுக்காக தீர்ப்பினை வழங்குவதற்கு 365 நாட்கள் முதல் 2,920 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2011 ஆம் ஆண்டு முதல் 2019 மார்ச் வரை இடம்பெற்ற ஒரு (01) குழு மாத்திரமே |
| (இ) 2016 ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு கிடைத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு வழங்கப்படாதிருந்த | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | சர்ச்சைக்குரிய வரித் தொகை மற்றும் தண்டப்பணம் ரூபா 24,699,101,553 ஆன 177 மேன்முறையீடுகள் காணப்பட்டன. | | |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு கிடைத்து எனினும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேன்முறையீடு ஆரம்பிக்கப்படாத வரி மேன்முறையீடுகள் 361 காணப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 2013 இன் 20 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் 4.1(அ) பிரிவின் பிரகாரம் மீளச் செலுத்தாத 10 சதவீத வைப்புத் தொகைக்கு சமமான தொகையொன்று ஆணைக்குழுவினால் செயற்பாடுகளுக்காக திறக்கப்பட்ட மற்றும் பேணிச் செல்லும் விசேட கணக்கொன்றுக்கு செலுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு வரி மேன்முறையீடு செய்யும் போது அறவிடப்படும் 10 சதவீத மீளச் செலுத்தாத பண வைப்புக்கள், வரி மேன்முறையீடு தீர்வு செய்யப்பட்டு தீர்வொன்றை வழங்கும் வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 21 சந்தர்ப்பங்களின் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 63,084,563 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | மீளச் செலுத்தாத 10 சதவீத வைப்புத் தொகை குறித்த காலப்பகுதியில் அரசின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். | விசாரணைகள், முடிவடையும் வரை சுயாதீன கணக்கொன்றில் வைக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2019 வரவு செலவுத் திட்ட உரையை அச்சிடல்

நிதி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரை 2019 மார்ச் 05 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக சிங்களம், தமிழ், ஆங்கில ஆகிய முன்று மொழிகளும் உள்ளடக்கப்படும் வகையில் 1000 பிரதிகளை அச்சிடுவதற்கு ரூபா

22,755,027 தொகை (வரியுடன்) மற்றும் தரவு உட்படுத்தப்பட்ட 300 CD மற்றும் தரவு உட்படுத்தப்படாத 200 CD களும் வழங்குவதற்காக ரூபா 110,848 (வரியுடன்) என மொத்தம் ரூபா 22,865,875 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2006 பொருள் மற்றும் வேலைகளுக்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1(அ) மற்றும் 4.3.2 வழிகாட்டல் கோவையின் பிரகாரம் சகல அண்மித்த செலவினங்கள் உட்பட மொத்த கிரய மதிப்பீடு பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு மொத்த கிரய மதிப்பீடு குறித்த பெறுகை குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டிய போதிலும், மேற்படி புத்தக அச்சீடு தொடர்பாக கூறுவிலைகோருவதற்கு முன்னர் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைக்கு இணங்கப்பட்டிருந்தது. | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1(அ) மற்றும் 4.3.2 வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கிரய மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதன் தேவைப்பாடு | வரவு செலவுத் திட்ட உரையின் உள்ளடங்கியுள்ள விடயங்கள் பக்கங்களின் எண்ணிக்கை,பயன்படுத்தப்படும் கடதாசி வகை, அச்சிடல் பொருட்கள், அச்சிடப்படும் பிரதிகளின் எண்ணிக்கை தொடர்பாக தீர்மானம் எடுத்தல் அநேகமாக வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் செயற்பாடு முடிவடையும் சந்தர்ப்பத்தில் ஆகும். எனவே மதிப்பீடொன்று தயாரத்தல் நடைமுறை ரீதியில் சிக்கல் வாய்ந்தது. |
| (ii) | 2019 வரவு செலவுத் திட்ட உரையை அரச அச்சகத்தில் அச்சிடுவதற்கு விலையான (வரியுடன்) ரூபா 1,876 தொகையை மிகைக்காதென அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதிப்பிரமாணம் 632 இன் பிரகாரம் அரச அச்சகத்தில் மேற்கொண்டால் புத்தகமொன்றுக்காக ரூபா 20,879 தொகை வீதம் 1000 பிரதிகளுக்காக ரூபா 20,879,000 ஆன தொகையை அரசிற்கு சேமித்திருக்க இயலுமாக இருக்கும். | குறைந்த கிரயத்தின் கீழ் நிதிப்பிரமாணம் 632 இன் பிரகாரம் அரச அச்சகத்தில் அச்சீடு செய்வதன் தேவையான தேவைப்பாடு | மிக இரகசியமாகவும் குறுகிய காலத்திலும் அச்சிடப்பட வேண்டிய அரசின் வரவு செலவுத் திட்ட உரையை அரச அச்சீட்டாளர் மூலமாக நிறைவேற்றுவது நடைமுறை ரீதியில் சிரமமான செயற்பாடொன்றாகும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | செலவிடப்பட்ட வரியுடன் கூடிய ரூபா 22,755,027 கூட்டுத்தொகை அச்சிடப்பட்ட பிரதிகளுடன் ஒப்பிடும் போது ஒரு பிரதிக்காக ரூபா 22,755 தொகையான மிகவும் கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் பிரதியொன்றுக்காக ரூபா 4,691 ஆன கிரயத்துடன் ஒப்பிடும் போது 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 18,083, ரூபா 20,628 மற்றும் ரூபா 18,064 என பரதயொன்றின் கிரயத்தில் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்தது. | செலவினங்களை மேற்கொள்ளும் போது இலங்கை அரசிற்கு சாதகமான வகையில் குறைந்த கிரயமொன்றின் கீழ் செய்வது அவசியமாகும். | வரவு செலவுத் திட்டத்தை அச்சிடல் கிரயத்தை குறைப்பதற்காக பின்பற்றப்படக்கூடிய செயற்பாடாக இருந்தால் அதற்காக எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) ஆண்டறிக்கையை அச்சிடல்

நிதி அமைச்சின் 2018 ஆண்டறிக்கை சிங்களகம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 3,500 பிரதிகளை அச்சிடுவதற்காக திறந்த கேள்வி கோரி அதற்கு இடையே ஆகக் குறைந்த விலையாக ரூபா 2,900,100 தொகை (வெட் உடன்) கேள்வி சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு அந்த அச்சீட்டு செயற்பாடுகளுக்காக மொத்தம் ரூபா 3,011,880 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2006 பொருள் மற்றும் வேலைகளுக்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1(அ) மற்றும் 4.3.2 வழிகாட்டல் கோவையின் பிரகாரம் சகல அண்மித்த செலவினங்கள் உட்பட மொத்த கிரய மதிப்பீடு பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு மொத்த கிரய மதிப்பீடு குறித்த பெறுகை குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2006 பொருள் மற்றும் வேலைகளுக்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கிரய மதிப்பீடு தயாரிப்பதன் தேவைப்பாடு | அவதானிப்புடன் இணங்குகின்றேன். தாமதம் காரணமாக கிரய மதிப்பீடு தயாரிப்பதற்கு முடியாமல் இருந்ததாகவும் 2019 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை அச்சிடல் ஆரம்பிக்கும் போது கிரய மதிப்பீட்டை தயாரிப்பதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | ஒப்பந்தக்காரரால் அச்சிடப்பட்டு அரச நிதி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஆண்டறிக்கைகளின் பிரதிகள் கிடைத்த திகதிகள் | பொருட்கள் கிடைக்கும் போது அவை கிடைக்கப் பெற்றதாகவும் பொருள் பெறுவனவு | பொருள் பெறுவனவு பத்திரம் வழங்கப்படாத போது கையளிக்கப்பட்ட அளவு மற்றும் கையளிக்கப்பட்ட திகதியில் ஒப்பந்தக்காரரின் |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்டு பொருள் பெறுகை குறிப்பு வழங்கப்பட்டு முறையாக பதிவேடுகளுக்கு உட்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அச்சிடல் ஒப்பந்தக்காரரின் பொருட்களை விநியோகிக்கும் கட்டளையின் 10 இன் பிரகாரம் 3485 பிரதிகள் கிடைத்திருந்ததுடன் 15 பிரதிகள் குறைவாக கிடைத்திருக்காமை அவதானிக்கப்பட்டது. | பத்திரம் வழங்கப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தும் தேவைப்பாடு | பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) ஒவ்வொரு மொழியிலும் அச்சிடப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை திட்ட வட்டமாக இனங்காணப்படாமல் மும்மொழிகளிலும் ஆண்டறிக்கை அச்சிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததாக கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எஞ்சிய பிரதிகளின் அளவு 418 ஆக இருந்தது. | தேவையான பிரதிகள் எண்ணிக்கையை முடியுமான வரை சரியாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு | 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2020 மே இறுதியில் வழங்கப்படும் வரை மேலும் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது நிதி அமைச்சருடன் அமைச்சு உத்தியோகத்தர்கள் அமைச்சு பதவியணியினரால் வெவ்வேறு உள்நாட்டு வைபவங்கள் மற்றும் கூட்டங்களுக்காக பங்குபற்றுவதற்கான பயன்படுத்திய உள்ளூர் விமான சேவைகளுக்கு கட்டணங்களாக ரூபா 9,101,453 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளூர் விமான சேவைகளை பயன்படுத்துவது தொடர்பாக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை அல்லது மதியுரை தொடர்பான | அமைச்சருடன் அமைச்சு உத்தியோகத்தர்கள் / அமைச்சரவை பதவியணிக்கு விமான பயன சேவைகளை பயன்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்ட சுற்றறிக்கை அல்லது ஆலோசனை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை எனவும் அது தொடர்பாக கவனம் செலுத்தும் தேவைப்பாடு | கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் கடமைகளுடன் ஒப்பிடும் போது தூர பிரயாணத்திற்காக நீண்ட நேரம் எடுப்பதும் பெருந்தெருக்கள் ஊடாக பயணம் செய்து நடைமுறை ரீதியாக சிக்கலொன்றாக உள்ளது. இச்சுற்றுலாக்கள் மிகவும் அவசரமானதும் மிகவும் அத்தியவசியமாக இருந்தமையாலும் கௌரவ அமைச்சரினதும் ஏனைய சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்களினதும் அவசர கடமையாக கருத்திற் |

| | | |
|---|---|---|
| தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | கொண்டு மிக விரைவில் கொழும்புக்கு வரும் தேவைப்பாடு அத்தியவசியமாக இருப்பதால் இலங்கை விமானப் படையின் உப கம்பனியொன்றான Herotour (Pvt) Ltd. இடமிருந்து இச்சுற்றுலா விற்காக போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி வளவில் சேவை உத்தியோகத்தர்களினதும் சேவை புரியும் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பிற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த ஸ்கேன் இயந்திரத்தினாலும் (Baggage Scanner) உடல் பரிசோதனை (Body inspection) இயந்திரத்தின் தொழில்நுட்ப செயற்பாடு உடலுக்கு பாதகமான நிலைமையொன்று உள்ளதா எனப் பரிசோதித்து குறித்த அறிக்கையை மீளாய்வாண்டு முடிவடைவதற்கு முன்னர் அமைச்சிற்கு பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்தது. எவ்வாறாயினும், இவ்வியந்திரம் 2019 ஒக்தோபர் மாதம் முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டது. | இயந்திரங்களின் தொழில்நுட்ப செயற்பாடு உடலுக்கு பாதகமான நிலைமையொன்றை ஏற்படுத்துமா என பரிசோதித்து குறித்த அறிக்கையை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவிடமிருந்து இதுவரை உரய அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை அமைச்சின் மொத்த பதவியணியில் 81 இல் அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 20 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட மட்டத்தில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் ஒப்பிடும் போது 35 சதவீதமாக இருந்தது. | பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமை செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தால் அவ்வெற்றிடங்களை நிரப்புவது அல்லது அவ்வாறு தாக்கம் ஒன்று இல்லாவிட்டால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு தேவைப்படுதல் வேண்டும். | சிரேஷ்ட மட்டத்தின் வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் வரை பதில் கடமை அடிப்படையில் கடமை மேவுகை மேற்கொள்வதாகவும் அமைச்சின் கடமைகள் மற்றும் செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக இவ்வெற்றிடங்களை மிக விரைவில் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. |